நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 17-ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 422 / 2021

CNR.No.TNTT07-010390-2021

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 783/2021 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரியின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | முத்துராமலிங்கம் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | ஆறுமுகநைனார் |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | SRM இல்லம், முத்துநகர், கோவில்பட்டி. |
| 7 | வயது | 44/2021 |
| தேதி | | |
| 8 | சம்பவம் | 08.05.2021 |
| 9 | புகார் | 30.07.2021 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரி கடந்த 09.07.2021 அன்று நடைமுறை கைது செய்யப்பட்டுள்ளார். |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:15 +0530

| | | |
|---|---|---|
| 11 | பிணை விபரம் | எதிரி கடந்த 28.10.2022 அன்று Crl.M.P. No.11666/2022–ல் இந்நீதிமன்றத்தில் பிணை பெற்றுள்ளார். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 22.11.2021 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 16.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இதச பிரிவுகள் 420, 417, 406 படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து குவிமுச பிரிவு 248(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 26.10.2021 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தானே முன்னிலை ஆகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 16.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரி மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) இவ்வழக்கின் சாட்சி 4 முருகலட்சுமி மூலம் சாட்சி 1 கற்பகவள்ளிக்கு எதிரி அறிமுகம் ஆகியுள்ளார். சாட்சி 1ன் கணவருக்கு 4 மாதத்திற்கு முன்பு, விபத்து

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:21 +0530

ஏற்பட்டதில் இருந்து குடும்பத்தில் கஷ்டம் இருந்து வருவதாக சாட்சி 1, சாட்சி 4 யிடம் கூறியுள்ளார். அப்போது சாட்சி 4, சாட்சி 1 யிடம் எதிரி பரிகார பூஜை செய்து பிரச்சனைகளை தீர்த்து வைப்பார் என்று சொன்னதின் பேரில் சாட்சி 1, எதிரியிடம் அவரது குடும்ப கஷ்டத்தை சொல்லவும், எதிரி, சாட்சி 1 யிடம் தங்க செயினை பூஜை அறையில் வைத்து பூஜை செய்தால் கஷ்டம் தீரும், செல்வம் பெருகும், உடல் நலமாகும் என ஆசை வார்த்தைகளை கூறி சாட்சி 1 யை நம்ப வைத்துள்ளார். அதன் பின்னர் 08.05.2021 ஆம் தேதி மாலை எதிரி, சாட்சி 1 ன் வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது சாட்சி 1 அவரிடமிருந்த சுமார் 9.060 கிராம் எடையுள்ள தங்க செயினை டிபன் பாக்சில் வைத்து எதிரியிடம் பூஜை செய்ய கொடுத்துள்ளார். மேற்படி எதிரி, சாட்சி 1 மற்றும் சாட்சி 2 உடையம்மாளை வெளியே போக சொல்லிவிட்டு டிபன் பாக்ஸ்சில் இருந்த சாட்சி 1 ன் சுமார் 9.060 கிராம் எடையுள்ள தங்க செயினை மோசடி செய்து எடுத்து வைத்துக் கொண்டு 08.05.2021 ஆம் தேதி மாலை 18.00 மணி முதல் 19.00 மணி வரை டிபன் பாக்ஸை பூஜை அறையில் வைத்து பூஜை செய்துவிட்டு அப்பால் சாட்சி 1 யிடம் 48 நாட்கள் தினமும் டிபன் பாக்ஸை பூஜை அறையில் வைத்து பூஜை செய்ய வேண்டும், இல்லையெனில் பூஜை பலிக்காது என்று சொல்லி நம்ப வைத்து ஏமாற்றி மோசடி செய்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 406, 417, 420 படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் படி கடந்த 22.11.2021 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது இதச பிரிவுகள் 420, 417, 406 படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 09.05.2022 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து குவிமுச பிரிவு 240 ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:28 +0530

அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.20 வரையான சான்றாவணங்களும், அசா.பொ.1 சான்றுப் பொருளும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) அசா.1 கற்பகவள்ளியின் கணவரான அசா.3 பாலமுருகன் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததிலிருந்து அசா.1ன் குடும்பத்திற்கு கஷ்டமாக இருந்துள்ளது. இதுசம்பந்தமாக அசா.1, அசா.3ன் தங்கையான முருகலட்சுமியிடம் சொன்ன போது, அவர் எதிரியைப் பற்றி கூறி, எதிரி தங்க செயினை வைத்து பூஜை செய்தால் நல்லது நடக்கும் என்று எதிரியிடம், அசா.1ன் செல்போன் நம்பரை கொடுத்துள்ளார். பின்னர் எதிரி, அசா.1ன் செல்போன் எண்ணை தொடர்பு கொண்டு 06.05.2021 அன்று 06.00 மணிக்கு அசா.1ன் வீட்டிற்கு வந்துள்ளார். பின்பு எதிரி அசா.1ன் கணவரின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்றும், தங்க செயினை வைத்து பூஜை செய்தால் கஷ்டங்கள் குறையும் என்று சொன்னதால், அசா.1, அவரது மகளின் கழுத்தில் இருந்த சுமார் 1 பவுனுக்கு கூடுதலான பட்டை செயினை எடுத்து எதிரியிடம் கொடுத்துள்ளார். எதிரி மேற்படி செயினை பெற்றுக் கொண்டு அசா.1 மற்றும் அசா.2 யையும் வெளியே இருக்க சொல்லிவிட்டு பூஜை செய்து விட்டு, அசா.1 மற்றும் அசா.2 யை உள்ளே அழைத்து, அசா.1யிடம் வாங்கிய செயினை டிபன் பாக்ஸில் வைத்துள்ளதாகவும், அதை 48 நாட்கள் வைத்து பூஜை செய்ய வேண்டும் என்றும், அதை திறக்கக்கூடாது என்றும் சொல்லிக் கொடுத்துள்ளார்.

5) 11.06.2021ஆம் தேதி அசா.1 பூஜை செய்து கொண்டிருந்த போது, டிவியில் எதிரியின் புகைப்படத்தை போட்டு பெண்களிடம் தங்க செயினை வாங்கி மோசடி செய்ததாக செய்தி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து, உடனே அசா.1 டிபன் பாக்ஸை திறந்து பார்த்த போது அதில் அசா.1ன் செயின் இல்லாமல், உப்பும், மிளகும் மட்டும் இருந்துள்ளது. எனவே, எதிரி, அசா.1யை ஆசை வார்த்தை கூறி மோசடி செய்துள்ளார். பின்பு அசா.1 நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி எதிரி மீது புகார்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:35 +0530

கொடுத்துள்ளார். அதன் பிறகு சுமார் 1 பவுன் செயினை அசா.1 நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டுள்ளார்.

6) இந்த வழக்கில் அசா.1 முதல் அசா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பிறகு எதிரியும், அசா.1ம் சமாதானமாகி விட்டதாக குவிமுச பிரிவு 320–ன் கீழ் தாக்கல் செய்த எம்.பி. எண்.15/2026 என்ற மனுவானது எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டுகள் என்பதால் இந்நீதிமன்றத்தால் கடந்த 22.06.2026 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

7) கடந்த 11.06.2021 அன்று 19.00 மணிக்கு அசா.ஆ.1 புகார் மனுவைப் பெற்றுக் கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளர் அசா.7 கனகசுந்தரம், அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.783/2021, இதச பிரிவுகள் 406, 417, 420 ஆக அ.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 311–ன் கீழான எம்.பி.எண்.17/2026 என்ற மனுவானது கடந்த 23.06.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசா.9 அங்குத்தாய் (காவல் உதவி ஆய்வாளர்) கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பட்டியல் சாட்சி 14 உதவி ஆய்வாளர் பரமசிவம், 11.06.2021 ஆம் தேதி இரவு 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று அசா.8 கிறிஸ்டோபர் மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.13 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.14 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜரில் உள்ள அசா.ஆ.11 முதல் கையொப்பத்தையும், டிபன் பாக்ஸிற்கான அத்தாட்சியில் உள்ள அசா.ஆ.12 முதல் கையொப்பத்தையும் அசா.8 செய்துள்ளார்.

8) பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 20.35 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்து அசா.பொ.1 மஞ்சள் கலர் துணி, அரிசி, மிளகு உள்ள சில்வர் டிபன் பாக்ஸ் ஒன்றை அசா.ஆ.15 அத்தாட்சியில் கைப்பற்றி அசா.ஆ.16 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:41 +0530

கயத்தார் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் கயத்தார் நிலைய குற்ற எண்.397/2021, பிரிவு 420 இதச வழக்கில் 24.06.2021 ஆம் தேதி மாலை 16.05 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட பேரூரணி சிறையில் சம்பிரதாய கைது செய்து சிறை கண்காணிப்பாளர் அவர்கள் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற போது எதிரி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய குற்ற எண். 783/2021, இதச பிரிவுகள் 406, 417, 420 வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் மீது பரிகார பூஜை செய்வதாக கூறி ஏமாற்றிய நகைகளை பற்றி தெரிவித்துள்ளார்.

9) பின்பு எதிரியை கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் பட்டியல் சாட்சி 15 ராணி இந்த வழக்கில் 10.07.2021 அன்று 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட சிறையில் வைத்து சிறை கண்காணிப்பாளர் அவர்கள் முன்பு சம்பிரதாய கைது செய்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பின்பு எதிரிக்கு பிடி வாரண்ட் பெறப்பட்டு 15.07.2021 அன்று சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிரியை 02.07.2021 அன்று 15.00 மணிக்கு போலீஸ் காவலில் எடுத்து 16.00 மணிக்கு சாட்சிகள் காசிவேல் மற்றும் எட்டுராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்பு 22.07.2021 ஆம் தேதி போலீஸ் காவலில் எடுத்து சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் மாரிகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் 21.30 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து 23.30 மணிக்கு DR Benefit fund ல் அடமானம் வைத்த அடமான சீட்டு ரசீது கடன் எண்.102414 யை அசா.ஆ.17 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியுள்ளார்.

10) பின்பு 23.07.2021 அன்று 10.45 மணிக்கு சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் மாரிகுமார் முன்னிலையில் கோவில்பட்டியில் உள் DR Benefit fund கிளை மேலாளரிடம் 9.6 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்றை அசா.ஆ.8 அத்தாட்சியில் கைப்பற்றி, அசா.ஆ.19 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட நகைக்கான ரசீது அசா.ஆ.9 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.18 ஆகவும், நகைக்கான பஞ்சநாமா அசா.ஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:46 +0530

11) ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.ஆ.2 இரண்டாவது கையொப்பத்தை அசா.4ம், அசா.ஆ.5 முதலாவது கையொப்பத்தை அசா.5ம், நகை அடகு வைத்ததற்கான அடமான ரசீதை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள அசா.ஆ.3 இரண்டாவது கையொப்பத்தை அசா.4ம், அசா.ஆ.6 முதலாவது கையொப்பத்தை அசா.5ம், DRP வங்கியில் நகையை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள அசா.ஆ.4 இரண்டாவது கையொப்பத்தையும் அசா.4ம், அசா.ஆ.7 முதலாவது கையொப்பத்தை அசா.5ம் செய்துள்ளார்கள். பின்பு எதிரியை 11.30 மணியளவில் போலீஸ் காவல் முடிந்து இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 30.07.2021ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

12) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 24.06.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

13) அரசுத் தரப்பில், எதிரி மோசடி செய்யும் எண்ணத்துடன் தங்க செயினை பெற்றுக் கொண்டு நேர்மையற்ற முறையில் நம்பிக்கை மோசடி செய்ததாக எதிரி மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

14) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:44:53 +0530

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார். எதிரி தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் முரண்பாடுகளுடன் சாட்சியமளித்துள்ளதாகவும், எனவே எதிரி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

15) அ.சா.2 ன் தங்கை மற்றும் அசா.3 ன் மனைவி தான் அ.சா.1 என்பதால் அ.சா.2, அசா.3 ஆகியோர்கள் ஒருதலைப்பட்ச சாட்சியாக இருக்க வாய்ப்புண்டு. அசா.4 மற்றும் அசா.5 ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் ஆகும். அசா.6 டி.ஆர்.பெனிபிட் பண்ட் நிறுவனத்தின் மேலாளர் ஆவார். அசா.7 மற்றும் அசா.9 ஆகியோர் காவல் துறை சாட்சியாகும். அசா.8 பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி சாட்சியாகும். அ.சா.8 யை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்த போதும் அவரது குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

16) அசா.1 தனது குறுக்கு விசாரணையில் நகையைக் காணவில்லை என்று டிபன் பாக்சோடு தான் காவல் நிலையம் சென்றதாகவும், அந்த டிபன் பாக்சில் உப்பு, மிளகு, மஞ்சள் துணி மட்டும் தான் இருந்தது என்றும், எதிரியை வேறு எங்கும் பார்த்ததில்லை என்றும், எதிரி வீட்டிற்கு வந்த அன்றே பூஜை செய்ததாகவும், சம்பவத்திற்கு முன்பு எதிரியை தனக்கு தெரியாது என்றும், அசா.2 ன் வீடு இரண்டு வீடு தள்ளி உள்ளது என்றும், புகார் கொடுக்க தானும், தனது கணவரும் சென்றதாகவும், புகாரை வீட்டில் வைத்தே எழுதிக் கொண்டு சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். அசா.2 தனது குறுக்கு விசாரணையில் அசா.1 தனது உறவினர் என்றும், சம்பவத்திற்கு முன்னர் தனக்கும், அசா.1 க்கும் எதிரியைத் தெரியாது என்றும், எதிரி, அசா.1 ன் வீட்டிற்கு வந்த போது தானும் உடன் இருந்ததாகவும், மீன் தொட்டியில் உள்ள 48 கற்களை கொடுத்து சிகப்பு துணியில் கட்டி வீட்டிலுள்ளவர்கள் மீது தடவி 48 நாட்கள் கிணற்றில் போட்டு வந்தால் கற்கள் கறைவது போல் வீட்டில் உள்ள கஷ்டங்களும் கரையும் என்று

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:44:58 +0530

சொன்னதாகவும், எதிரி மீது புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு அசா.1ம், அவரது கணவரும் போனதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

17) அசா.3 தனது குறுக்கு விசாரணையில் தனது வீட்டில் பூஜை நடந்த விவரங்கள் தனக்கு நேரடியாக தெரியாது என்றும், டிவியில் வந்த செய்தியை தான் பார்க்கவில்லை என்றும், புகார் மனுவை தனது மகள் எழுதியதாகவும், போலீசாரிடம் தகவல் சொன்ன பிறகு தான் புகார் மனு எழுதியதாகவும் சாட்சியமளித்துள்ளார். அசா.4 தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்திற்கு முன்னர் சுப்பிரமணியனை தெரியும் என்றும், பாலமுருகனை தெரியாது என்றும், தான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்கு தெரியும் என்றும், நகையை திருப்புவதற்கு தான் போலீசாருடன் சென்றதாகவும், நகையை திருப்பியதற்கு ஆய்வாளர், வங்கி மேலாளர் தன்னிடமும், சுப்பிரமணியத்திடமும் கையொப்பம் கேட்டதால் செய்து கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

18) அசா.5 தனது குறுக்கு விசாரணையில் போலீசாருடன், எதிரியின் வீட்டிற்கு தாங்கள் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும், போலீசாருடன் வங்கிக்கு போனதாகவும், தான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தனக்கு தெரியும் என்றும், 22.07.2021 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு தன்னை சாட்சியாக இருக்க சொல்லி போலீசார் அழைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அசா.6 தனது குறுக்கு விசாரணையில் 23.07.2021 ஆம் தேதி தான் டி.ஆர். பெனிபிட் பண்டில் மேலாளராக இருந்ததற்கான ஆவணம் கொடுத்ததாகவும். தான் கையொப்பம் செய்த அத்தாட்சியில் பெயர் இல்லாமல் மேலாளர் என்று மட்டும் தான் உள்ளது என்றும், அசா.ஆ.9 ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றும், இதற்கு முன்னர் எதிரி அடமானம் வைத்ததாக ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை ஆனால் சொன்னதாகவும், தன்னைத் தவிர தனது நிறுவனத்தில் வேறு யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு நகையை அடகு வைத்ததற்கு பணமாக கொடுத்ததாகவும், எதிரி பணம் பெற்றுக் கொண்டதற்கு லெட்டர் பேடு தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:45:04 +0530

19) பார்வை மகஜர் சாட்சியான அசா.8 தனது சாட்சியத்தில் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்களை எப்போது செய்து கொடுத்ததாக தனக்கு தெரியாது என்றும், தன் வீட்டில் இருந்த போது, தன்னிடம் கையொப்பம் கேட்டதால் செய்து கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளதால் அரசு தரப்பு புலன் விசாரணை மீது சந்தேகம் ஏற்படுகிறது. அசா.1ன் உறவுக்கார சாட்சிகள் பொதுவாக அரசு தரப்பிற்கு ஆதரவாக மிகைப்படுத்தி சாட்சியமளித்து இருப்பார்கள்.

20) மேற்படி நகை சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. புகார் மனுவில் அசா.1 மேற்படி செயின் அசா.1ன் உடையது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அசா.1 தனது முதல் விசாரணையில் மேற்படி செயின் தனது மகளுடைய கழுத்தில் இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி மீது வேறு மோசடி வழக்குகள் இருந்ததாக அசா.1 சாட்சியமளித்துள்ள நிலையில் வேறு எந்த ஆவணமும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அசா.1 தனது முதல் விசாரணையில் புகார் மனுவில் டாலருடன் சேர்த்து இரண்டு பவுன் செயின் என்று சொன்னதாகவும், டாலரை தனது மகள் கழற்றி விட்டதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில், புகார் மனுவில் இரண்டு பவுன் செயினை அசா.1, எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கில் சுமார் 9.800 கிராம் எடை உள்ள தங்க செயின் வழக்கு சொத்தாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார் மனு மற்றும் அசா.1ன் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது படிவம் 9ல் குறிப்பிடப்பட்டுள்ள தங்கச் செயின் அளவு குறித்து வேறுபாடுகள் உள்ளது வெளிப்படுகிறது. அசா.1 தனது குறுக்கு விசாரணையில் தான் மேற்படி டிபன் பாக்ஸோடு சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி டிபன் பாக்ஸ் வாதியின் வீட்டில் வைத்து கைப்பற்றப்பட்டதாக படிவம் 91லும், அத்தாட்சியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது முரண்பாடாக உள்ளது.

21) முன்பின் பழக்கம் இல்லாத எதிரியை நம்பி அவரிடம் வழக்கு சொத்து செயினை கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. பட்டியல் சாட்சி 4 முருகலட்சுமியின் பேச்சைக் கேட்டு கொண்டு தான் அசா.1, எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளதாகவும், மேற்படி நகை அசா.1ன் உடையது இல்லை என்றும், மேற்படி நகை எதிரியினுடையது

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:45:10 +0530

என்றும், எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. அசா.1ன் மகள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேற்படி நகையின் ரசீதை போலீஸிடம் கொடுக்கவில்லை என்று அசா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். அசா.1 தனது முதல் விசாரணையில் தான் டிபன் பாக்ஸை திறந்து பார்த்த போது அசா.2 உடன் இருந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவத்திற்கு முன்பு எதிரியை தனக்கு தெரியாது என்று அசா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார்.

22) சம்பவம் அசா.1ன் வீட்டில் நடந்ததாக அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில் எதிரி வந்தது குறித்து அருகில் உள்ளவர்களுக்கு சொல்லக்கூடாது என்று எதிரி சொன்னதால் அருகில் உள்ளவர்களுக்கு தெரியாது என்று அசா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி மீன் தொட்டியில் உள்ள கற்களை கிணற்றில் போட சொன்னதாக அசா.2 சாட்சியமளித்துள்ள நிலையில் அவ்வாறு அசா.1 சாட்சியமளிக்கவில்லை. இவ்வழக்கில் சுமார் 9.800 கிராம் மதிப்புள்ள தங்க செயின் மீட்கப்பட்டுள்ள நிலையில் இரண்டு பவுன் தங்கச் செயினை வைத்து அசா.1 பூஜை செய்ததாக அசா.1 கூறியதாக அவரது கணவரான அசா.3 சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது.

23) அசா.1ன் வீட்டில் பூஜை நடந்த விவரங்கள் தனக்கு நேரடியாக தெரியாது என்று அசா.3 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். அசா.1 தனது குறுக்கு விசாரணையில் வீட்டில் வைத்து புகார் மனு எழுதிக் கொண்டு காவல் நிலையம் சென்றதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், சம்பவத்தை போலீசாரிடம் சொன்ன பிறகுதான் புகார் மனு எழுதியதாக அசா.3 சாட்சியமளித்துள்ளார். அசா.4 தனது குறுக்கு விசாரணையில் அசா.1ன் கணவரான அசா.3 மற்றும் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியான அசா.5 ஆகியோர்கள் லோடுமேனாக வேலை பார்ப்பதாகவும், தான் ஓட்டுனர் வேலை பார்ப்பதாகவும், அசா.4 தனது குறுக்கு விசாரணையில் தான் கையெழுத்து போட்ட பேப்பரில் இந்த வழக்கு சொத்தை தவிர வேறு எந்த சொத்துக்களை ஒப்படைக்கப்பட்டது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று ஒப்புக்கொண்டுள்ளார். அசா.3 உடன் அசா.4, அசா.5 ஆகியோர்கள் வேலை

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:45:15 +0530

பார்ப்பதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் நடுநிலையான சாட்சியாக இருக்க வேண்டியது அவசியமானது.

24) அசா.4 தனது குறுக்கு விசாரணையில் அசா.5 யை இதற்கு முன்பு தெரியும் என்று ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அசா.3 தன்னுடன் வேலை பார்ப்பவர் என்று ஒப்புக் கொண்டுள்ளார். அசா.4, அசா.3 உடன் வேலை பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ள நிலையில் அசா.5, அசா.3 உடன் வேலை பார்ப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி நகையை உரிமை கோரி மேற்படி DR பெனிபிட் அண்ட் நிறுவனத்தின் தரப்பில் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி அடிக்கடி அசா.6 ன் நிறுவனத்தில் கடன் வாங்கி உள்ளதாக அசா.6 சாட்சியமளித்துள்ள நிலையில் அது தொடர்பாக எந்த ஆவணமும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி தங்க செயினுக்கான ஆவணத்தை அசா.1 தாக்கல் செய்யவில்லை என்று அசா.7 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அசா.1 புகார் கொடுக்க வந்த போது மேற்படி டிபன் பாக்ஸை கொண்டு வந்ததாக அசா.7 சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது.

25) இரண்டு பவுன் செயினை எதிரி மோசடி செய்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 9.6 கிராம் செயின் அடகு வைக்கப்பட்டதாக அசா.ஆ.9 ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது முரண்பாடாக உள்ளது. அசா.1 தனது மறு குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியங்கள் மீது சந்தேகம் ஏற்படுகிறது. எதிரி கயத்தார் காவல் நிலைய குற்ற எண் 397/2021ல் வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக அசா.9 சாட்சியமளித்துள்ள நிலையில் அது தொடர்பாக எந்த ஆவணமும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. டிபன் பாக்ஸ் கைப்பற்றப்பட்டது குறித்து புலன் விசாரணைக்கும், சாட்சிகளின் சாட்சியத்திற்கும் இடையே முரண்பாடு காணப்படுகிறது. மேற்படி தங்க செயினின் எடை தொடர்பாக புகார் மனுவிற்கும், சாட்சிகளின் சாட்சியத்திற்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுகிறது. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் மேற்படி தங்க நகையின் எடை குறித்தும், டிபன் பாக்ஸ் கைப்பற்றப்பட்டது குறித்தும் மேற்படி முரண்பாடுகள் காணப்பட்டிருக்காது. மேற்படி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:45:20 +0530

டிபன் பாக்ஸ் கைப்பற்றப்பட்டது குறித்தும், நகையின் எடை குறித்தும் முரண்பாடுகள் காணப்படுவதால் அரசு தரப்பு வழக்கு மீது சந்தேகம் ஏற்படுகிறது.

26) இந்த வழக்கில் 8 சாட்சிகள் விசாரித்த பிறகு எதிரியும், அ.சா.1ம் சமாதானமாகிவிட்டதாக குவிமுச பிரிவு 320 ன் கீழான எம்.பி. எண். 15/2026 என்ற மனுவானது சாட்சிகள் விசாரணைக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டதால் கடந்த 22.06.2026 அன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை பொறுத்தவரை அ.சா.1யை குறுக்கு விசாரணை செய்த பிறகு எதிரியும், அ.சா.1ம் சமாதானமாகிவிட்டதாக இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள். அ.சா.1 தனது முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.1 தனது மறு குறுக்கு விசாரணையில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

27) அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ள காவல் துறை சாட்சியான அசா.7 தனது சாட்சியத்தில், அ.சா.1 இடம் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அசா.9 தனது சாட்சியத்தில் வழக்கினை விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். எனவே அவர்களது சாட்சியத்தை இவ்வழக்கில் ஒத்துரைப்பு சாட்சியமாக மட்டுமே ஏற்றுக்கொள்ள இயலும்.

28) மேலும் அ.சா.1 கற்பகவள்ளி தனது மறு குறுக்கு விசாரணையில், முதல் விசாரணையில் போலீசார் சொல்லிதான் சாட்சியம் அளித்துள்ளதாகவும், புகார் மனுவை போலீசார் எழுதி அதில் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், தான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், தான் சமரசமாக செல்வதாகவும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், அ.சா.1 தனது முதல் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்திற்கு முரண்பாடாக சாட்சியமளித்துள்ளார்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:45:25 +0530

29) எதிரி ஏமாற்றும் எண்ணத்துடன் தங்க நகையை பெற்றுக் கொண்டு நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றியதாக அ.சா.1 தனது மறு குறுக்கு விசாரணையில் குறிப்பட்டு சாட்சியமளிக்கவில்லை. எதிரி நம்பிக்கை மோசடி செய்ததாக அ.சா.ஆ.1 புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு முரண்பாடாக எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று மறு குறுக்கு விசாரணையில் அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியத்தை அனுசரித்து, வேறு நடுநிலையான சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1, அசா.2, அசா.3, அசா.4, அசா.5, அசா.6 ஆகியோர்கள் முரண்பாடாக சாட்சியமளித்ததால் அவர்களின் சாட்சியங்கள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. அ.சா.1 தனது மறு குறுக்கு விசாரணையில், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளதாகவும், எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதாகவும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைகிறது.

30) அ.சா.1, அசா.2, அசா.3 வரையிலானவர்கள் உறவு முறை சாட்சிகள் என்பதால் அவர்கள் ஒருதலைப்பட்ச சாட்சியாக இருக்க வாய்ப்புண்டு. அ.சா.1 ன் மறு குறுக்கு விசாரணையை பார்வையிடும் போது அ.சா.1 ன் முதல் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. அ.சா.1 தனது முதல் மற்றும் குறுக்கு சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பாடாக தனது மறு குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளது அரசு தரப்பு வழக்கு மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அ.சா.1 தனது மறு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ள நிலையில், மற்ற அரசுத் தரப்பு சாட்சியத்தினை மட்டும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக ஏற்றுக் கொள்ள இயலாது.

31) அரசு தரப்பு சாட்சிகள் முரண்பாடாக சாட்சியமளித்துள்ளதாலும், அ.சா.1, அசா.2, அசா.3 ஆகியோர்கள் உறவு முறை சாட்சிகள் என்பதாலும், அ.சா.1 தனது மறு குறுக்கு விசாரணையில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியமளித்துள்ளதாலும், எதிரிக்கு எதிரான வேறு நடுநிலையான சாட்சிகள் உறுதியாக சாட்சியமளிக்கவில்லை என்பதாலும், மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில், எதிரி மீதான

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:45:30 +0530

குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

32) முடிவில் அரசு தரப்பில் எதிரி மீதான இதச பிரிவுகள் 420, 417, 406 படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

33) இவ்வழக்கில் பி.ஆர்.எண்.203/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.பொ.1 யை மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் அழிக்கவும், பி.ஆர்.எண்.207/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள தங்க செயினை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

34) இவ்வழக்கில் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் குவிமுச 437–ஏ–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி குவிமுச பிரிவு 437–ஏ–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:45:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திருமதி. கற்பகவள்ளி | நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி |
| 2. | திருமதி. உடையம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திரு. பாலமுருகன் | கண்ணுற்ற சாட்சி |
| 4. | திரு. மாரிக்குமார் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 5. | திரு. சுப்பிரமணியன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 6. | திரு. ராமசாமி | எதிரி நகை அடகு வைத்த நிறுவனத்தின் மேலாளர் சாட்சி |
| 7. | திரு. கனகசுந்தரம் | முதல் தகவல் அறிக்கை சாட்சி |
| 8. | திரு. கிறிஸ்டோபர் | பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 9. | திருமதி. அங்குத்தாய் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | புலன்விசாரணை குறித்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் மனு – 11.06.2021 | அ.சா.1 – 25.08.2022 | அசல் |
| 2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.4 ன் இரண்டாவது கையொப்பம் – 22.07.2021 | அ.சா.4– 07.09.2022 | அசல் |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.17 17:45:40 +0530

| | | | |
|---|---|---|---|
| 3 | நகை ரசீதிற்கான அத்தாட்சியில் உள்ள அசா.4ன் இரண்டாவது கையொப்பம் – 22.07.2021 | அ.சா.4 – 07.09.2022 | அசல் |
| 4 | நகைக்கான அத்தாட்சியில் உள்ள அசா.4ன் இரண்டாவது கையொப்பம் – 23.07.2021 | அ.சா.4 – 07.09.2022 | அசல் |
| 5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.5ன் முதல் கையொப்பம் – 22.07.2021 | அ.சா.5 – 07.09.2022 | அசல் |
| 6 | நகை ரசீதிற்கான அத்தாட்சியில் உள்ள அசா.5ன் முதல் கையொப்பம் – 22.07.2021 | அ.சா.5 – 07.09.2022 | அசல் |
| 7 | நகைக்கான அத்தாட்சியில் உள்ள அசா.5ன் முதல் கையொப்பம் – 23.07.2021 | அ.சா.5 – 07.09.2022 | அசல் |
| 8 | அத்தாட்சி (நகை) – 23.07.2021 | அ.சா.6 – 15.09.2023 | அசல் |
| 9 | நகைக்கான ரசீது – 09.05.2021 | அ.சா.6 – 15.09.2023 | அசல் |
| 10 | முதல் தகவல் அறிக்கை – 11.06.2021 | அ.சா.7 – 22.03.2024 | அசல் |
| 11 | பார்வை மகஜரில் உள்ள அசா.8ன் முதல் கையொப்பம் – 11.06.2021 | அ.சா.8 – 05.02.2025 | அசல் |
| 12 | அத்தாட்சியில் (மஞ்சள் கலர் துணி, அரிசி, மிளகு உள்ள சில்வர் டிபன் பாக்ஸ்) உள்ள அசா.5ன் முதல் கையொப்பம் – 11.06.2021 | அ.சா.8 – 05.02.2025 | அசல் |
| 13 | பார்வை மகஜர் – 11.06.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |

| | | | |
|---|---|---|---|
| 14 | மாதிரி வரைபடம் – 11.06.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 15 | அத்தாட்சி (மஞ்சள் கலர் துணி, அரிசி, மிளகு உள்ள சில்வர் டிபன் பாக்ஸ்) – 11.06.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 16 | படிவம் 91 (மஞ்சள் கலர் துணி, அரிசி, மிளகு உள்ள சில்வர் டிபன் பாக்ஸ்) – 11.06.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 17 | அத்தாட்சி (அடமான சீட்டு ரசீது) – 22.07.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 18 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி – 22.07.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 19 | படிவம் 91 (நகை) – 23.07.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |
| 20 | பஞ்சநாமா – 03.09.2021 | அ.சா.9 – 23.06.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:**

| சான்றுப் பொருள் எண் | சான்றுப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் மூலம் / சான்றளித்தவர் மூலம் |
|---|---|---|
| 1. | பி.ஆர். எண். 203/2021 ல் தாக்கல் செய்யப்பட்ட மஞ்சள் கலர் துணி, அரிசி, மிளகு உள்ள சில்வர் டிபன் பாக்ஸ் ஒன்று – 11.06.2021 | அ.சா.9 – 23.06.2026 |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.17 17:45:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி